## செய்தி வெளியீடு

**செ.வெ.எண்.52** **நாள்:28.01.2020**

**நீலகிரி மாவட்டம் உதகை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் இன்று (28.01.2020) மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை சார்பில் ரூ.1.77 கோடி மதிப்பில் நடைபெற்று வரும், முடிக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சி திட்ட பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட பெல்மந்தாடா கனாகம்பை பகுதியில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.61.75 இலட்சம் மதிப்பில் மேம்படுத்தப்பட்ட சாலை பணியினையும், பிரதம மந்திரி ஆவாஷ் யோஜனா திட்டத்தின் கீழ் கனாகம்பை பகுதியில் ரூ.1.70 இலட்சம் மதிப்பில் நடைபெற்று வரும் வீடு கட்டும் பணியினையும்,மகாத்மா காந்தி ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5.60 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட கனாகம்பை துவக்கப்பள்ளி தடுப்புச்சுவரினையும், தும்மனட்டி ஊராட்சிக்குட்பட்ட கப்பச்சி பாகலா பகுதியில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.36.45 இலட்சம் மதிப்பில் கப்பச்சி முதல் பாகலா வலை முடிக்கப்பட்ட சாலை பணியினையும், கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட பென்ஹட்டி பகுதியில் தேயிலை தொழிற்சாலை கட்டுவதற்கு அனுமதி கோரிய இடத்தினையும், கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட தீனட்டி கிராமத்தில் ரூ.20.00 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சிமெண்ட் கான்கிரீட் சாலையினையும், கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட தீனட்டி, மசக்கல் பகுதியில் தனியார் தேயிலை தொழிற்சாலை கட்டுவதற்கு அனுமதி கோரிய இடங்களையும், கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட ஒன்னத்தலை கோவில்மேடு பகுதியில் தமிழ்நாடு ஊரக சாலை மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.49.92 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட சாலை பணியினையும்,கக்குச்சி ஊராட்சிக்குட்பட்ட குடுமணியில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.2.00 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட அங்கன்வாடி மைய பழுதுபார்ப்பு பணியினையும் ஆக மொத்தம் ரூ.1.77 கோடி மதிப்பில் முடிக்கப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டப்பணிகளை மாவட்ட ஆட்சியர் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் சம்மந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் பணிகளை விரைவில் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருமாறு அறிவுறுத்தினார்.

மேலும் கனாகம்பை துவக்கப்பள்ளி மற்றும் அங்கன்வாடி மையத்தின் சமையற் கூடம் மற்றும் கழிப்பறை வசதி குறித்து ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அப்பள்ளியில் பயிலும் மாணவ, மாணவிகளிடம் கல்வியின் தரம் குறித்து கேட்டறிந்து நீங்கள் அனைவரும் நன்றாக படிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் அவர்கள் அறிவுரை வழங்கினார்.

இந்த ஆய்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை (திட்ட இயக்குநர்) திருமதி.கெட்சி லீமா அமாலினி, உதகை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திரு. ரமேஷ்கிருஷ்ணன், திரு.சந்திரசேகர், கக்குச்சி ஊராட்சி மன்ற தலைவர் திரு.ராஜமூர்த்தி மற்றும் அரசுத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உடனிருந்தனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்.